**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், சிங்கம்புணரி**

முன்னிலை: திருமதி. G.அபர்ணா, M.A.,LLM.,B.Sc.,
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், சிங்கம்புணரி.
2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ம் நாள் வெள்ளிக்கிழமை
(2056 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் சித்திரை திங்கள் 5 ம் நாள்)

**அசல் வழக்கு எண்:20/2020**

**CNR.No.TNSV160001852020**

1. நாச்சம்மை (எ) நாச்சம்மாள் (இறப்பு)
2. கருப்பையா
3. அழகர்சாமி (இறப்பு)
4. வள்ளி
5. ரஞ்சித்
6. ராமசாமி
7. புவனா -- வாதிகள்

(இடைநிலை மனு எண்:8/2025 –28.04.2025 ன் படி பிராது திருத்தப்பட்டது)

– எதிர் –

1. கருப்பையா
2. சின்னையா
3. செம்பன் -- பிரதிவாதிகள்

(பிராது இடைநிலை மனு எண்:9/2025 நாள்:30.07.2025 உத்தரவு படி திருத்தப்பட்டது)

இவ்வழக்கானது திருப்பத்தூர் மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்:114/2010 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு சிவகங்கை முதன்மை மாவட்ட அமர்வு நீதிமன்றத்தால் மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் ROC.50317/2018 dated:18.10.2019–ன் படி D.No.7348/2019 dated:24.10.2019 அன்று மாற்றம் செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண்:20/2020 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.எ.அப்துல்ஹக்கீம் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு.பொன்முடி அவர்கள் முன்னிலையாகியும் 07.04.2026 ம் தேதியன்று இறுதி விசாரணைக்காக

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:39:21 +0530

வந்தபோது இருதரப்பு வழக்குரை, ஆவணங்கள், சாட்சியம் மற்றும் இருதரப்பு வாதங்கள் ஆகியவற்றை ஓர்வு செய்தும் இன்றுவரை என் சீரிய ஆய்விலிருந்துவரும் இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் கீழ்கண்டவாறு வழங்கும்.,

**<u>தீர்ப்புரை</u>**

1. தாவா சொத்துககளை வாதிகள் தொடர்ந்து அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகளோ அல்லது அவர்களது ஆட்களோ எந்தவிதமான தடையும், இடைஞ்சலும் செய்யக் கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், வழக்கின் செலவுத் தொகை மற்றும் இதர பரிகாரங்கள் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>2. வழக்குரையின் சுருக்கம்:</u>**

2(1). தாவா சொத்துக்கள் சிங்கம்புணரி தாலுகா, சிறுமருதூர் குரூப், செல்லியம்பட்டியில் உள்ளது. தாவா சொத்துக்கள் 1,2 வாதிகளின் தகப்பனாரின் தகப்பனார் வைத்தியலிங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களாகும். மேற்படி வைத்தியலிங்கம் சர்வே எண்:239/2ல் கூரை வீடு (கீர்த்து வீடு) கட்டியும், மண்சுவர் வைத்தும் அதனை சேர்ந்த காலியிடத்தையும் சர்வே எண்:239/3ல் உள்ள காலியிடத்தையும் அனுபவம் செய்து வந்தார். மேற்படி மச்சக்காளை இறந்த பிறகு மச்சக்காளை மனைவி நாச்சம்மை 1ம் வாதியும், மச்சக்காளை மகன்கள் கருப்பையா, அழகர்சாமியான 2,3 வாதிகளும் தொடர்ந்து அனுபவம் செய்து வருகிறார்கள்.

2(2). தாவாச் சொத்துக்களை வாதிகளும் அவருடைய முன்னோர்களும் சுமார் 60 ஆண்டுகளுக்கு மேலாக அனுபவம் செய்து வருகிறார்கள். தாவா சொத்திற்கு மேற்கே 1ம் பிரதிவாதியுடைய ஓட்டு வீடு உள்ளது. 1ம் பிரதிவாதி வாதிகளுடைய தாவா சொத்தை சேர்த்து விட்டால் 1ம் பிரதிவாதி பெரிய தார்சு வீடு கட்டி மீதமுள்ள இடத்தை வைத்து கொண்டு ஆடம்பரமாக வாழலாம் என 03.03.2010ம் தேதி விலைக்கு கேட்டார்.

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:39:27 +0530

2(3). வாதிகள் தாவா சொத்துக்கள் பூர்வீக சொத்துக்கள் என்றும் வேறு இடங்கள் கிடையாது என்றும் தாவா இடத்தில் சுமார் 60 ஆண்டுகளக குடியிருந்து வருவதால் விலைக்கு தரமுடியாது என்று கூறிவிட்டார்கள். 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை 2ம் பிரதிவாதியின் தகப்பனார் செம்பன் என்பவர் 1,2 வாதிகளின் தகப்பனாரின் தகப்பனார் வைத்தியலிங்கம் என்பவரிடம் 1950ல் கிரையத்திற்கு வாங்கி விட்டதாகவும், 1ம் பிரதிவாதியின் தகப்பனார் 2ம் பிரதிவாதியின் தகப்பனாரிடம் கிரையம் வாங்கிவிட்டதாகவும், தாவா இடத்தை விலைக்கு கொடுக்கவில்லை என்றால் தாவா இடத்தில் உள்ள வீட்டை இடித்து விட்டு தாவா சொத்துக்களை அபகரித்து கொண்டு பிரதிவாதி தார்சு வீடு கட்ட போவதாகவும், கடந்த 20.05.2010ம் தேதி செல்லியம்பட்டியில் உள்ள மக்கள் இடையே பிரஸ்தாபம் செய்து வருகிறார். வாதிகளின் தகப்பனார் வைத்தியலிங்கம் தாவா சொத்துக்களை கிரையம் கொடுக்கவில்லை. தாவா சொத்துக்களில் வாதிகள் தான் குடியிருந்து கொண்டு காலியிடத்தை சேர்த்து அனுபவம் செய்து வருகிறார். எனவே வாதிகள் தாவா சொத்துக்களை பிரதிவாதிகள் எந்தவிதமான ஆக்கிரமிப்பும் செய்ய கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3. <u>பிரதிவாதிகள் எதிர்வழக்குரையின் சுருக்கம்:</u>**

3(1). பிரதிவாதிகள் தரப்பில், இதில் வியக்தமாய் சொல்லியுள்ள சங்கதிகளை தவிர ஏனையவற்றை பிரதிவாதிகள் மறுக்கின்றனர். வைத்தியலிங்கம் அம்பலத்தின் மகன்களான மச்சக்காளை அம்பலம் மற்றும் சின்னப்பயல் அம்பலம் ஆகியோரும், சின்னையா அம்பலத்தின் மகனான வைத்தியலிங்கம் அம்பலமும் இணைந்து, 12.08.1950ம் தேதியிட்டு, சிங்கம்புணரி சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆவணம் எண் 1584/1950-ஆகப் பதிவு செய்த கிரைய பத்திரத்தின் வாயிலாக, செம்பன் அம்பலத்தின் மகனான அழகன் அம்பலம் அவர்களுக்கு "ராமநாதபுரம் மாவட்டம், சிங்கம்புணரி பதிவுத் துணை மாவட்டம், செல்லியாம்பட்டி கிராமக் குடியிருப்புப் பகுதியில் அமைந்துள்ள,

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:39:33 +0530

மச்சக்காளையின் வீட்டிற்கு மேற்கிலும், மங்கைபாகனின் வீட்டிற்கு வடக்கிலும், வைத்தியலிங்கம் அம்பலத்தின் மகன்களான மச்சக்காளை அம்பலம் மற்றும் சின்னப்பயல் அம்பலம் ஆகியோரின் வீட்டிற்கு கிழக்கிலும், மச்சக்காளை அம்பலத்திற்குச் சொந்தமான காலி இடத்திற்குத் தெற்கிலும் அமைந்துள்ள ஒரு காலி வீட்டு மனை. அளவுகள்: கிழக்கு-மேற்கு சுமார் 34 காலடிகள், வடக்கு-தெற்கு 20 காலடிகள்; மேலும், பின்வரும் விவரங்களைக் கொண்ட மற்றொரு சொத்து: அதாவது, சின்னையாவின் வீட்டிற்கு மேற்கிலும், வைத்தியலிங்கம் அம்பலத்தின் வீட்டிற்கு வடக்கிலும், எடராஜன் அம்பலத்தின் வீட்டிற்கு கிழக்கிலும், மச்சக்காளை அம்பலத்தின் காலி இடத்திற்குத் தெற்கிலும் அமைந்துள்ள ஒரு காலி வீட்டு மனை. அளவுகள்: கிழக்கு-மேற்கு சுமார் 15 காலடிகள், வடக்கு-தெற்கு சுமார் 16 காலடிகள்." இவற்றின் சர்வே எண்கள் (S.Nos) 239/3 மற்றும் 239/2 ஆகும். இவ்விரு சொத்துக்களும் இணைந்து, வாதுரையில் (Plaint) குறிப்பிடப்பட்டுள்ள நான்கு எல்லைகளுக்குள் அமைந்துள்ளதை விலைக்கு வாங்கினார். இவ்விரண்டு வழக்கு சொத்துகளாகும். மேலும், வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறே இவை மொத்தம் 1 1/2 சென்ட் பரப்பளவைக் கொண்டுள்ளன. அச்சொத்துக்களில் அமைந்துள்ள ஓலை வேய்ந்த மண் சுவர் கொண்ட வீடு பிரதிவாதிகளுக்குச் சொந்தமானது. மேலும், வழக்குச் சொத்துக்களை அவர்கள் தற்போது உடைமையிலும் அனுபவத்திலும் வைத்துள்ளனர்.

3(2). தாவா சொத்துக்களை விலைக்கு வாங்கியவரான செம்பன் அம்பலத்தின் மகன் அழகன் அம்பலம் என்பவரே, இவ்வழக்கின் 2-வது பிரதிவாதியான சின்னையாவின் தந்தையாவார். 07.09.2009 அன்று வழக்குச் சொத்தில் அமைந்துள்ள ஓலை வேய்ந்த வீட்டிற்கு, வீட்டு வரி மதிப்பீடு செய்யுமாறு 2-வது பிரதிவாதி பஞ்சாயத்துத் தலைவரிடம் விண்ணப்பித்துள்ளார். வழக்குச் சொத்துக்களுக்குத் தாங்கள் உரிமையுடையவர்கள் என்பதையும், அச்சொத்துக்களைத் தங்கள் உடைமையிலும் அனுபவத்திலும் வைத்துள்ளனர்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:39:38 +0530

என்பதையும் நிரூபிக்கும் வகையிலான எவ்வித ஆவணங்களையும் வாதி தாக்கல் செய்யவில்லை. எனவே வாதிகளின் வழக்கு பிரதிவாதிகள் தரப்பு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**4.வழக்கெழு வினாக்கள்:**

வழக்குரை மற்றும் எதிர் வழக்குரை பரிசீலனை செய்யப்பட்டு இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பின்வரும் எழுவினாக்கள் வனையப்பட்டன.

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff is entitled to permanant injunction relief as against the defendant as prayed for ? |
| 2. | To what other relief? |

**5. சான்றுகள்:**

இவ்வழக்கில் வாதி தரப்பில் வாதி வா.சா.1 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். வாதி தரப்பில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.12 வரையான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டிருக்கின்றன. மேலும் வாதிகள் தரப்பில் பெருமாள் என்பவர் வா.சா.2 ஆக விசாரணை செய்யப்பட்டுள்ளார். பிரதிவாதிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரணை செய்யப்பட்டு சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

6. **வழக்கெழுவினா 1 ன் மீதான தீர்வு முடிவு:**

6(1). சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி தாலுகா, செல்லியம்பட்டி கிராமத்தில் உள்ள சர்வே எண்:239/3, 239/2 உள்ள கூரை வீடும், காலியிடமும் சுமார் 1 1/2 செண்ட் மட்டும் என்பது வழக்கு சொத்தாகும்.

6(2). வாதிகள் தரப்பில் தாவா சொத்துக்கள் 1ம் வாதியின் கணவரும், 2,3 வாதிகளின் தகப்பனாரின் தகப்பனாரான வைத்தியலிங்கத்திற்கு பாத்தியப்பட்ட சொத்துக்கள் என்றும் மேற்படி வைத்தியலிங்கம் சர்வே எண்:239/2ல் கூரை வீடும், சர்வே எண்:239/3ல் உள்ள காலியிடத்தை கூரை வீட்டுடன் சேர்த்து அனுபவித்து வந்ததாகவும், வைத்தியலிங்கத்திற்கு பிறகு வைத்தியலிங்கத்தின்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:39:45 +0530

மகனான மச்சகாளை அனுபவித்து வந்து, பின்னர் அவரது வாரிசுகளான வாதிகள் அனுபவித்து வருவதாகவும், தாவா சொத்திற்கு மேற்கே 1ம் பிரதிவாதியின் ஓட்டு வீடு உள்ளதால் 1ம் பிரதிவாதி தாவா சொத்துக்களை கிரையம் கேட்ட போது வாதிகள் கிரையம் கொடுக்காததால் வாதிகளின் அனுபவத்தில் பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்ததால் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக வாதம் முன்வைக்கப்பட்டது.

6(3). பிரதிவாதிகள் தாக்கல் செய்துள்ள எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதியின் தந்தை அழகு என்றும் செம்பன் இல்லை என்றும் 2ம் பிரதிவாதியின் தந்தை அழகன் தாவா சொத்துக்களான சர்வே எண்:239/3 மற்றும் சர்வே எண்:239/2ல் கட்டுப்பட்ட 1 1/2 செண்ட் இடத்தை வைத்தியலிங்கத்தின் மகன்களான மச்சகாளை அம்பலம் மற்றும் சின்னபயல் அம்பலம் ஆகியோர்களிடமிருந்து பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவண எண்:1584/1950ன் படி 12.08.1950ம் தேதி கிரையம் பெற்று மண்சுவர் கொண்ட ஓட்டுவீடு கட்டி அனுபவித்து வந்தனர் என்றும் தாவா சொத்தில் வாதிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்பதால் வாதிகளின் வழக்கு தள்ளுபடி செய்யதக்கது என்று எதிர்வழக்கை தாக்கல் செய்துள்ளனர்.

6(4). இந்நிலையில் வழக்கு சொத்து தனது உடைமையில் இருந்து வருவதாக கூறும் வாதிகளை தங்கள் தரப்பு வழக்கை முதலில் நிரூபிக்க வேண்டும். இந்நிலையில் வாதி தன் தரப்பு வழக்கை உரிய சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் மூலமாக நிரூபித்திருக்கின்றனரா? என்பதை ஆராய்ந்து முடிவு செய்ய வேண்டும். வாதிகள் தரப்பில் 5ம் வாதி ரஞ்சித் வா.சா.ஆ1 ஆக விசாரணை செய்யப்பட்டு வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.14 வரையான ஆவணங்களை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

6(5). வா.சா.ஆ.1 ஆவணமானது 1ம் வாதி நாச்சம்மாள் வட்டாட்சியருக்கு கொடுத்த மனுவாகும். வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலிக்கையில் 21.12.2009ம் தேதி திருப்பத்தூர் தாலுகா, சிறுமருதூர் குரூப், செல்லியம்பட்டி கிராமத்தில்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:39:51 +0530

வசிக்கும் லேட்.மச்சக்காளை மனைவி ம.நாச்சம்மாள் என்பவர் புதிய புல எண்கள்:239/3 மனை பரப்பு 00020 ச.மீட்டர் 239/2 மனை பரப்பு 00020 சமீ ஆக மொத்தம் 40 சமீட்டர் பரப்பளவுள்ள இடம் தன்னுடைய குடும்பத்திற்கு சொந்தமான பூர்வீக பாத்தியப்பட்ட இடமென பட்டா வழங்க கோரி திருப்பத்தூர் வட்டாட்சியருக்கு மனு கொடுத்துள்ளது தெரிய வருகிறது.

6(6). வா.சா.ஆ–2 ஆவணத்தை பரிசீலிக்கையில் 02.12.2009 ம் தேதி செல்லியம்பட்டியில் வசிக்கும் மச்சக்காளை மனைவி நாச்சம்மாள் என்பவர் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் கொடுத்த மனுவிற்கான ஒப்புதல் ரசீதாகும். வா.சா.ஆ.3 ஆவணத்தை பரிசீலிக்கையில் 25.11.2009 ம் தேதி திருப்பத்தூர் தாலுகா, சிறுமருதூர் குரூப், செல்லியம்பட்டி கிராமத்தில் வசிக்கும் லேட்.மச்சக்காளை மனைவி ம.நாச்சம்மாள் என்பவர் நத்தம் புதிய புல எண்கள்:239/3 மனை பரப்பு 00020 ச.மீட்டர் 239/2 மனை பரப்பு 00020 சமீ ஆக மொத்தம் 40 சமீட்டர் பரப்பளவுள்ள இடம் தன்னுடைய குடும்பத்திற்கு சொந்தமான பூர்வீக பாத்தியப்பட்ட இடமாகும் என்றும் மேற்படி இடத்திற்கு வாதி நாச்சம்மாள் பெயரில் வரி விதிப்பு ஏற்படுத்தி வீட்டு வரி வழங்க வேண்டி செல்லியம்பட்டி ஊராட்சிமன்ற தலைவருக்கு அனுப்பிய மனு என்பது தெரிய வருகிறது.

6(7). வா.சா.ஆ–4 ஆவணத்தை பரிசீலிக்கையில் ஊராட்சி மன்ற எழுத்தருக்கு அனுப்பிய மனுவிற்கான ரசீதாகும். வா.சா.ஆ–5 ஆவணத்தை பரிசீலிக்கையில் ஊராட்சி மன்ற தலைவருக்கு அனுப்பிய மனுவிற்கான ரசீதாகும். வா.சா.ஆ–6 ஆவணத்தை பரிசீலிக்கையில் ஊராட்சி மன்ற தலைவருக்கு அனுப்பிய தபாலின் ஒப்புதல் அட்டையாகும். வா.சா.ஆ–7 ஆவணத்தை பரிசீலிக்கையில் ஊராட்சி மன்ற தலைவருக்கு அனுப்பிய தபாலின் ஒப்புதல் அட்டையாகும்.

6(8). வா.சா.ஆ–8 ஆவணமானது வழக்கறிஞர் அறிவிப்பாகும். வா.சா.ஆ–8 ஆவணத்தை பரிசீலிக்கையில் 04.06.2010 ம் தேதி சிவகங்கை மாவட்டம்,

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.18 18:39:57 +0530

திருப்பத்தூர் தாலுகா, சிறுமருதூர் குரூப், செல்லியம்பட்டியில் குடியிருந்து வரும் லேட்.மச்சக்காளை மனைவி நாச்சம்மை, மகன்கள் கருப்பையா, அழகர்சாமி ஆகியோர்கள் சிவகங்கை மாவட்டம், மாவட்ட ஆட்சியர், தேவகோட்டையில் உள்ள ராம்நகரில் இருந்து வரும் கோட்டாட்சியர், வட்டாட்சியர் ஆகியோர்களுக்கு கருப்பையா, அழகர்சாமி ஆகியோர்களின் தகப்பனார் மச்சகாளையின் தகப்பனார் வைத்தியலிங்கம் சர்வே எண்கள்:239/3, 239/2 ல் உள்ள சொத்தில் கூரை வீடு கட்டி மண்சுவர் வைத்து அனுபவம் செய்து வந்தார் என்றும் மேற்படி வைத்தியலிங்கம் இறப்பிற்கு பிறகு வாரிசுஅடிப்படையில் மச்சகாளை அனுபவம் செய்து பின்னர் அவர் மனைவி, மகன்கள் அனுபவம் செய்து வருவதாகவும், வாதிகளின் வீட்டிற்கு மேற்கே உள்ள கருப்பையாவிற்கு பாத்தியப்பட்ட ஓட்டு வீடும், காலியிடமும் இருந்து வருவதால் அந்த இடத்தோடு சேர்த்து பெரிய தார்சு வீடு கட்டுவதற்காக போர்ஜரியான ஆவணங்களை உற்பத்தி செய்து பட்டா பெற முயற்சி செய்வதால் பட்டா வழங்க கூடாது என வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியுள்ளது தெரிய வருகிறது.

6(9). வா.சா.ஆ–9 ஆனது வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான ரசீதாகும். வா.சா.ஆ.10 ஆவணமானது 31.05.2010 ம் தேதி வாதி நாச்சம்மாள் என்பவர் இடப்பிரச்சனை சம்பந்தமாக எஸ்.வி.மங்களம் காவல்நிலையத்தில் அளித்த புகார்மனுவிற்கான புகார்மனு ஏற்பு சான்றிதழாகும். வா.சா.ஆ.11 ஆவணமானது கதவு எண்:541 ற்கான வீட்டுவரி ரசீதுகளாகும். வா.சா.ஆ.12 ஆவணமானது அழகர்சாமி பெயரில் உள்ள கதவு எண்:541 ற்கான மின்கட்டண ரசீதாகும். வா.சா.ஆ.13 ஆவணமானது புகைப்படமாகும். வா.சா.ஆ.14 ஆவணமானது சர்வே எண்:239 ன் புலவரைபட ஒளிநகலாகும்.

6(10). வாதிகள் தரப்பு சாட்சிகள் தங்கள் தரப்பு வழக்கை சான்றாவணங்கள் மூலம் தங்கள் தரப்பு வழக்கை நிரூபணம் செய்துள்ளாரா? வாதிகள் தரப்பு வழக்கிற்கு மாறான சங்கதிகளை பிரதிவாதிகள் தரப்பில் நிரூபித்திருக்கிறாரா? என்பதை ஆராய வேண்டியது அவசியமாக இருப்பதாக இந்நீதிமன்றம்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:40:02 +0530

கருதுகிறது.

6(11). வாதிகள் தரப்பில் வா.சா.ஆ.1 முதல் 7 வரையான ஆவணங்கள் வட்டாட்சியர் மற்றும் செல்லியம்பட்டி ஊராட்சிமன்ற தலைவருக்கு தாவா சொத்தில் உள்ள வீட்டிற்கு தனது பெயருக்கு (1ம் வாதி நாச்சம்மை) பட்டா வழங்க வேண்டும் என்றும் வீட்டு வரி ரசீது வழங்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்து அனுப்பிய மனு ரசீதுகளாகும்.

6(12). வா.சா.ஆ.8 முதல் வா.சா.ஆ.10 வரையான ஆவணங்கள் வருவாய்துறை அதிகாரிகளுக்கு வாதிகள் தங்களது வழக்கறிஞர் மூலம் பிரதிவாதிகளுக்கு பட்டா வழங்க கூடாது என்று தாக்கல் செய்த ஆட்சேபனை மனு மற்றும் ரசீதுகளாகும். வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ–10 வரையான ஆவணங்கள் வழக்கு சொத்து வாதிகளுக்கு பாத்தியமானது என்பதை நிரூபணம் செய்வதற்கு போதுமானதாக இல்லை என இந்நீதிமன்றம் கருதுகிறது.

6(13). வா.சா.ஆ.11 ஆவணமான வீட்டு வரி ரசீதுகளை பரிசீலிக்கையில் செல்லியம்பட்டியை சேர்ந்த மா.அழகர்சாமி, வள்ளி பெயரில் 2016, 2017, 2019, 2021, 2022, 2023, 2024 ஆகிய வருடங்களுக்குரிய வரி ரசீதுகளாகும். வா.சா.ஆ–12 ஆவணத்தை பரிசீலிக்கையில் 19.11.2024ம் தேதி அழகர்சாமி பெயரில் உள்ள மின்கட்டண ரசீதாகும். இவ்வழக்கானது 2010ம் வருடம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.11, வா.சா.ஆ.12 ஆவணங்கள் இவ்வழக்கு தாக்கல் செய்ததற்கு பின்னர் ஏற்பட்ட ஆவணங்கள் என்பதால் மேற்படி ஆவணங்கள் தாவா சொத்து வழக்கு தாக்கலின் போது வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிப்பதற்கு போதுமான ஆவணங்களாக கருத இயலாது. மேலும் வா.சா.ஆ.13 ஆவணமான புகைப்படும், வா.சா.ஆ.14 ஆவணமான சர்வே எண்:239ன் புலவரைபடமும் தாவா சொத்து வாதிகளின் அனுபவத்தில் உள்ளது என்பதை நிரூபிக்க போதுமான ஆவணமாக கருத இயலாது. தாவா சொத்துக்கள் வாதிகளின் உடைமையில் உள்ளது என்பதை நிரூபிப்பதற்கான ஆவணங்கள் எதுவும் வாதிகள் தரப்பில்

ABARNA GUNASEKAR
Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:40:08 +0530

தாக்கல் செய்யவில்லை.

6(14). தாவாசொத்தில் விவரத்தில் கூரை வீடும் காலியிடமும் இருப்பதாக தெரிவித்திருக்கும் நிலையில் வழக்கு சொத்தில் தொடர்ந்து குடியிருந்து வருவதை நிரூபிக்கும் வகையில் உரிய ஆவணங்கள் எதையும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

6(15). பிரதிவாதிகள் தரப்பில் 23.08.2010ம் தேதி எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது தெரிய வருகிறது. பிரதிவாதிகள் தங்களது எதிர்வழக்குரையில் 2ம் பிரதிவாதியின் தந்தை தாவா சொத்துக்களை 1ம் வாதியின் கணவரும், 2,3 வாதிகளின் தகப்பனாருமான மச்சக்காளை மற்றும் சின்னபயல் ஆகியோரிடமிருந்து 12.08.1950ம் தேதியிட்ட பதிவு செய்யப்பட்ட கிரைய பத்திரம் மூலம் கிரையம் வாங்கி அனுபவம் செய்து வருவதாகவும், தாவா சொத்தில் தங்களுக்கு கிரைய பாத்திய உரிமை உள்ளது என்று கூறியுள்ள நிலையில் வாதிகளுக்கும், பிரதிவாதிகளுக்கும் இடையே வழக்கு சொத்தை பொறுத்து கடுமையான உரிமை மூல பிரச்சனை உள்ளது என்ற சங்கதி வெளிப்படுகிறது. ஆனால் தாவா சொத்தை பொருத்து விளம்புகை பரிகாரம் எதுவும் வழக்குரையில் கோரப்படவில்லை.

6(16). இந்நிலையில் வழக்கு சொத்தின் மீது வாதிகள் தரப்பிலும், பிரதிவாதிகள் தரப்பிலும், எதிரெதிர் உரிமை கோருகிறார்கள் என்பதும் வழக்கு சொத்தை பொறுத்து கடுமையான உரிமை மூல பிரச்சனை (Title Dispute) தரப்பினர்களிடையே உள்ளது என்பது வெளிப்படுகிறது.

6(17). எதிர்வழக்குரையின் மூலமாக வழக்கு சொத்தின் மீது வாதிகளின் உரிமை மறுக்கப்பட்டு பிரதிவாதிகள் கிரையம் பெற்றதாக கூறப்பட்டுள்ள நிலையில் பின்னிட்டு திருத்தல் மனுவின் மூலமா தாவாச் சொத்தில் தங்களது பாத்தியத்தை நிரூபிப்பதற்கு எந்த நடவடிக்கையும் வாதிகள் தரப்பில் எடுக்கவில்லை. இந்நிலையில் வழக்கு சொத்தை பொறுத்து உரிமை விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டுமே கோரியுள்ளதால்

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.18 18:40:15 +0530

இவ்வழக்கு நிலைநிற்கதக்கதல்ல என இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

மேலே கண்ட விரிவான விவாதங்களின் அடிப்படையில், தாவா சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்பதற்கு விளம்புகை பரிகாரம் கோராமல் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் மட்டும் கோரியுள்ளதாலும், 1ம் வாதி நாச்சம்மை (எ) நாச்சம்மாள் தாவா சொத்திற்கு பட்டா கோரி மனு தாக்கல் செய்துள்ளார் என்பது வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.7 ஆவணத்தின் மூலம் தெரிய வருவதாலும், தாவா சொத்திலுள்ள வீடு சர்வே எண்:239/2–ல் உள்ளது என்பதையும் சர்வே எண்:239/3 ல் காலியிடம் உள்ளது என்பதையும் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையிலும், தாவா சொத்து 1,2 வாதிகளின் தகப்பனார் வைத்தியலிங்கத்திற்கு பாத்தியப்பட்டது என்பதை வாதிகள் தரப்பில் தகுந்த சாட்சிய சான்றாவணங்கள் மூலம் நிரூபணம் செய்யாத நிலையில், தாவா சொத்து வாதிகளின் உடைமையிலும் அனுபவத்தில் உள்ளதை நிரூபணம் செய்யாத நிலையில் பிரதிவாதிகளுக்கெதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோர வாதிகளுக்கு எவ்வித அருகதையும் இல்லை. எனவே வாதிகள் கோரியுள்ள பரிகாரம் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதல்ல என இந்நீதிமன்றம் 1 எழுவினாக்கு தீர்வு காண்கிறது.

**7. வழக்கெழுவினா 2 ன் மீதான தீர்முடிவு**:

2. To what other relief?

வழக்கின் சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகளையும் கவனத்தில் இறுத்தி பரிசீலிக்கும் போது இதர பரிகாரம் ஏதும் வழங்குவதற்கில்லை என்று இந்நீதிமன்றம் உத்தரவிடுகிறது.

**9.இறுதி முடிவு:**

1. இவ்வழக்கு தள்ளுபடி செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது.
2. அவரவர் செலவுத் தொகையை அவரவரே ஏற்று கொள்ள தீர்ப்பளிக்கப்படுகிறது

இத்தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு

ABARNA GUNASEKAR

Digitally signed by ABARNA GUNASEKAR
Date: 2026.04.18 18:40:21 +0530

அவரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு இன்று 2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 18 ம் நாள் சனிக்கிழமை அவையறிய பகரப்பட்டது.

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.18 18:40:27 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.

**வாதி தரப்பு சாட்சிகள்:**

| | |
|---|---|
| வா.சா.1 | ரஞ்சித் (5 ம் வாதி) |
| வா.சா.2 | பெருமாள் |

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | |
|---|---|
| வா.சா.ஆ.1 | 02.12.2009 ம் தேதியிட்ட வட்டாட்சியரிடம் கொடுத்த மனு அசல் |
| வா.சா.ஆ.2 | மனு ரசீது அசல் |
| வா.சா.ஆ.3 | 25.11.2009 ம் தேதியிட்ட மனு அசல் |
| வா.சா.ஆ.4 | மனு ரசீது அசல் |
| வா.சா.ஆ.5 | மனு ரசீது அசல் |
| வா.சா.ஆ.6 | அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ.7 | அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் |
| வா.சா.ஆ-8 | 04.06.2010 ம் தேதியிட்ட வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ.9 | அஞ்சலக ரசீது அசல் |
| வா.சா.ஆ-10 | 31.05.2010 தேதியிட்ட புகார்மனு ஏற்பு ரசீது |
| வா.சா.ஆ.11 | வீட்டு வரி ரசீதுகள் அசல் |
| வா.சா.ஆ-12 | மின்கட்டண ரசீது கணிணி நகல் |
| வா.சா.ஆ.13 | புகைப்படம், சிடி |
| வா.சா.ஆ-14 | சர்வே எண்:239 ன் புலவரைபடம் கணிணி நகல் |

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்** : இல்லை

/ உண்மை நகல்/

ABARNA GUNASEKAR Digitally signed by ABARNA GUNASEKAR Date: 2026.04.18 18:40:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,
சிங்கம்புணரி.